# உயிர்ப்போம் உயிர் கொடுப்போம்

தீபகத்திலிருந்து

இறையாசீர்!

உயிர்ப்பின் பெருவிழா வாழ்த்துக்களோடு உங்களை சந்திப்பதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன். உயிர்ப்பு என்பது வெறும் வரலாறு அல்ல அது ஒரு விசுவாச அனுபவம் திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவருக்கும் வாழ்வின் அடித்தளமாகவும் விசுவாசத்தின் ஊற்றாகவும் இருப்பது உயிர்ப்பே. இறைமகனின் உயிர்ப்பே, சிலுவையில் இறந்த கிறிஸ்துவின் உயிர்ப்பே. இந்த உயிர்ப்புக்கு இட்டுச்சென்ற புனித வாரத்தின் ஒவ்வொரு நாளும் நமது விசுவாசத்திற்கு அடித்தளமான சில விழுமியங்களை முன்னிறுத்தி நம்மை சிந்திக்கவும், வாழ்வை மாற்றவும் அழைக்கிறது. பெரிய வியாழன் நம்மை சேவை மனப்பான்மையோடு அன்பு செய்பவர்களாக வாழ அழைக்கிறது. பெரிய வெள்ளியின் ஆழமான செய்தி அன்பில் விளையும் தியாகத்தை நமக்கு சவாலாக நிலைநிறுத்துகிறது. சேவையிலும் தியாகத்திலும் ஊன்றிய வாழ்வு அழிவதில்லை, அது உயிர்ப்பிலே நிறைவாழ்வாய் உருபெறுகிறது என்பதை உயிர்ப்பின் விழா நமக்கு எடுத்துச் சொல்லுகின்றது.

இன்றைய சமூகச் சூழலைக் காணும்போது உள்ளத்தில் ஒருவித கலக்கமே விஞ்சி நிற்கின்றது என்பதே. உண்மை நம்மை எந்தவித்திலும் பொருட்படுத்தாத அரசியல் அமைப்பு: உண்மையான தேவைகளையும், தேவையான முன்னேற்றத்தையும் முன்னேற்றத்துடன் கூடிய முழுச்சமூக மாற்றத்தையும், சற்றும் மதியாத பொருளாதார முன்னெடுப்புக்கள், மதிக்கெட்ட அடிமைத்தனமான வாழ்வாதாரத்தையும் இலவசங்களையும் நலத்திட்டங்களையுமே நம்பி பிழைப்பு நடத்தும் வர்க்கங்களாக மக்களை மாற்றி வருகின்ற போக்கு, அரசியலையும் வியாபாரத்தையும் கலந்து நடத்தப்படும் மனிதாபிமானமற்ற சுரண்டல், அரசியலையும் சமயத்தையும் கலப்படமாக்கி கடவுளை கடைப்பொருளாகவும் ஆன்மீகத்தை ஆதிக்க கருவியாகவும் இதில் வரும் ஆதாயங்களை மட்டுமே மனதில் நிறுத்தி கபட நாடகம் ஆடும் தலைவர்கள், சீரழிந்துக்கொண்டே வரும் இயற்கை, வலுவிழந்துக்கொண்டே வரும் மானுடமாண்பு என எங்கு நோக்கினும் மனமிழக்கச்செய்யும் காட்சிகள் நிறைந்த இந்த நாட்களிலே... உயிர்ப்பு, புதுவாழ்வு, எழுச்சி, எதிர்நோக்கு இவையெல்லாம் காணக்கிட்டா கனவுகளாகிவிடுமோ என்ற அச்சம் நம்மை சூழ்ந்துக்கொள்கிறது.

அஞ்சாதே! கலங்காதே! நான் உயிர்த்துவிட்டேன், தீமையை தகர்த்துவிட்டேன், சாவை வென்று விட்டேன், அநீதியை அழித்துவிட்டேன். அலகையை அலறடித்துவிட்டேன், என்று அன்பை நிலை நாட்டுகின்றார் உயிர்த்த கிறிஸ்து. அவரது அன்பிலே, அவரது மாட்சியிலே, அவரது ஒளியிலே, அவரது உயிர்ப்பிலே, நாமும் உயிர்ப்போம். நம்மை சுற்றியுள்ளோரின் வாழ்விலும் எதிர்நோக்கின் ஒளியேற்றுவோம், நேர்மறையான எண்ணங்கள், வளர்ச்சிக்குரிய சிந்தனைகள், நிறைவாழ்வுக்குரிய உண்மைகள் இவற்றைப் பற்றிக்கொண்டு நாமும் உயிர்ப்போம்! இவ்வுலகையும் உயிர்ப்பிப்போம்!

அன்புடன்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

## பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

02.04.2017 தவக்கால 5ம் ஞாயிறு - திருப்பலி

09.04.2017 ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு - திருப்பலி

13.04.2017 பெரிய வியாழன் - திருப்பலி

14.04.2017 திருச்சிலுவை ஆராதனை - வழிபாடு

16.04.2017 உயிர்ப்பு ஞாயிறு - திருப்பலி

23.04.2017 பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு - இறை இரக்க ஆண்டவரின் திருவிழா-திருப்பலி

25.04.2017 புனித மாற்கு நற்செய்தியாளர் திருவிழா - திருப்பலி

28.04.2017 புனித லூயிஸ் தே மான்ஃபோர்ட் விழா - திருப்பலி

29.04.2017 புனித சியென்னா கத்ரீன் திருவிழா - திருப்பலி

30.04.2017 பாஸ்கா கால மூன்றாம் ஞாயிறு - திருப்பலி

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. திருப்பலியும் கிறிஸ்தவ வாழ்வும் - பெரிய வியாழன் தரும் பாடங்கள்
2. உண்மையான அன்பும் தியாகமேற்கும் குணமும் - பெரிய வெள்ளி சிந்தனை
3. உயிர்ப்பும் இன்றைய வாழ்வும்
4. திருச்சபை செய்திகள்

# பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

**02.04.2017 தவக்கால 5ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணிசம்பந்தன்

**முன்னுரை**

இறையேசுவில் இனிய நெஞ்சங்களே, "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்கிற ஒப்பற்ற வார்த்தைகளே நம்மீதான இயேசுவின் பாசத்தின் உச்சக்கட்டம். எந்நிலையிலும் மனம் தளராத இயேசு, மார்த்தாவின் சகோதரன் இலாசரின் இறப்பு நிலையறிந்து மனம் கலங்கி கண்ணீர்விட்டு அழுதபோது பாசத்தின் சிகரமாக, அனுதாபத்தின் ஊற்றாக மிளிர்கிறார். என்றும் நம்மீதும் இயேசு பாசம் கொள்வாரா? ஆம், நிச்சயம் கொள்வார்.

இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுள் நம்மையும் புது வாழ்வுக்கு உயர்த்துவார் என்ற எண்ணத்தோடு அவரில் நம்பிக்கை கொள்ள புனித பவுல் நமக்கு அழைப்பு விடுக்கிறார். மேலும் ஆண்டவர் கல்லறைகளை திறக்கும் நாள் வரும்போது தன் ஆவியை நம்மீது பொழியும் நேரம், நாம் உயிர்பெறும் நேரம், நம் தாயகமாகிய விண்ணகத்தில் குடிபெயரும் நேரம், நாம் ஆண்டவரை உணருவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

விண்ணகத்தின் திறவுகோலே இறைவா, திருச்சபையை தாங்கும் தூண்களாக நம் திருத்தந்தை கர்தினால்கள், ஆயர்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் தங்கள் தகுதியறிந்து, உயர்ந்த கொள்கைகளை மனதில் பதித்து, தொண்டுபுரியும் எண்ணம் வளர்த்து, சுயநலன்கள் துறந்து பணிபுரிய வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

பாசத்தின் ஊற்றே இறைவா, பாவப்பட்ட உம் மக்களாகிய எங்களை பாவம் விலக்கி பாசத்துடன் வழிநடத்தும் உம் மகிமையை உலகிற்கு எடுத்துரைக்க உம் இறையரசு உலகெங்கும் மலர்ந்திட எவ்வகை துன்பம்வரினும் உம்மை மறுதலிக்காமல் வேதசாட்சிகளாக நாங்கள் வாழ்ந்திட தேவையான மன உறுதியை அளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

மருத்துவர்க்கெல்லாம் மருத்துவரே இறைவா, நாடெங்கும் பரவிவரும் மர்ம காய்ச்சல், ரூபெல்லா போன்ற நோய்களினால் பலியாகும் உயிர்கள், விபத்துக்கள் இவைகளின் தாக்கம் குறையவும், மக்கள் விழிப்புணர்வு பெற்று நோயற்ற வாழ்வு வாழவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

பாதுகாக்கும் இறைவா, எப்போதெல்லாம் பாவங்கள் பெருகுகிறதோ அப்போதெல்லாம் உம் பார்வை பாவம் செய்பவர்களை அழிக்கிற பொழுதுகளைப்போல், எம் நாட்டில் பொல்லாரை ஒழித்து, நல்லாட்சி செய்பவர்களை இனம் கண்டு நல்லாட்சி நிலைபெற வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**09.04.2017 ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு** **திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

**"என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்"**

இறையேசுவில் பிரியமுள்ள சகோதரர் சகோதரிகளே, இன்று நம் அன்னையாம் திருச்சபை, ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்தோலை ஞாயிறைக் கொண்டாட அழைக்கிறது. வரலாற்று நாயகன், இறைமகன் தமது தந்தையின் விருப்பத்தை மனித வடிவெடுத்து எளிய வாழ்வு, புரட்சிமிகு போதனைகள் மற்றும் அரும் அடையாளங்கள் வழியாக இறையாட்சியை முழக்கமிட்டு அறிவித்தார். அதனாலேயே ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்புக்கும், ஏளனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளானார். ஆனால் தங்களது வாழ்வுக்கு வழிகாட்டி, தாழ்வில் துணை நின்ற இயேசுவின் பின்னால் ஒரு கூட்டம் அவரது சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அணிவகுத்துக் காத்திருந்தது. வலிமை வாய்ந்த

உரோமைத் தலைமையின்கீழ் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் தங்களை மீட்க வரயிருப்பவர் இவரே என இயேசுவை விண்ணதிர முழக்கமிட்டு, தங்களுடைய மேலாடைகளையும் ஒலிவ மரக்கிளைகளையும் வீதியெங்கும் பரப்பி எருசலேம் நகருக்குள் "ஓசான்னா" பாடி வரவேற்றார்கள். இயேசுவுக்கு, ஓசான்னா பாடிய மக்கள் "ஒழிக" என்று அடுத்த கட்டத்தில் பாடப்போவதும் தெரியும், சிலுவையில் கையளிக்கப்பட போவதும் தெரியும். அமைதியில்தான் அன்பின் சிகரத்தை அடையமுடியும் என்பதை இயேசுவின் ஊர்வலம் நமக்கு நினைவுப்படுத்துகிறது. குருத்தோலைகள் உயர்த்தப்படுவது போல் நமது இதயங்களும் உயரட்டும் இந்தப் புதிய காலம் நம்மைப் புனிதர்களாக மாற்றும் காலமாக அமையட்டும். இதோ அரசருக்குரிய சிவப்பு நிற மேலாடையை அணிந்து திருப்பலிக் கொண்டாட்டத்தை தலைமையேற்று நடத்த குருவானவர் வருகிறார். நாமும் பக்தியுடன் பங்கேற்க அவரை வரவேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

சமாதானத்தின் அரசரே இறைவா, திருச்சபையை வழிநடத்திச் செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளுக்கும் குரல் கொடுத்து பெண்ணின் மேன்மையைக் காத்திடத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நீதியின் அரசரே இறைவா, குடும்பம், சாதி, சமயம், சமூகம் அனைத்தும் நீதிக்கு எதிரான எந்தப் பிரிவினைக்கும் இடம் தராமல் வாழவும், வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் உண்மையாக மக்களுக்கு உழைப்பவர்களை, விவசாயி நலன் கருதுபவர்களை மனித நேயமிக்கவர்களை நீர்தாமே தேர்ந்தெடுத்து தமிழகத்தில் தன்னாட்சி நிறைவுபெற்று தலைநிமிர அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

விடுதலையின் அரசரே இறைவா, ஏமன் நாட்டில் கடத்தப்பட்டுள்ள அருள்பணி டாம் உழுன்னலில் அவர்களின் விடுதலையை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும், இந்திய அரசு விரைவாக எடுத்து விடுதலைக்கான சூழ்நிலையை உருவாக்க, அரசுத்தலைவர்களுக்குத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**13.04.2017 பெரிய வியாழன் திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

**"இதை என் நினைவாகச் செய்யுங்கள்"**

இன்று புனித வாரத்தின் பெரிய வியாழன். இன்றைய வழிபாட்டில் மூன்று முக்கியமான நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன. அவைகள், இறையன்பை பிறருக்கு பகிர்ந்தளிக்கும் குருத்துவம், அன்பிற்கு இலக்கணமான நற்கருணை, புதிய கட்டளையாக அன்புக்கட்டளை ஆகியவற்றை ஏற்படுத்தியது இந்நாளில்தான். இன்றைய திருப்பலியில் சிறப்பான முறையில் குருக்களுக்காகவும் நம்மை ஏற்றுக்கொள்ளாதவர்கள், துன்புறுத்துவர்களுக்காகவும் செபிப்போம். நமக்காக தன் உடலையே பிட்டுக்கொடுத்து நற்கருணையில் குடிகொண்டிருக்கும் இயேசுவுக்கு ஆராதனையும், வணக்கமும், மரியாதையும் செலுத்துவோம். இயேசு தன் அன்பை வெளிப்படுத்த சீடர்களை நண்பர்களே என்று அழைத்தார். நாமும் புதிய கட்டளையாம் அன்புக்கட்டளையை பின்பற்ற அனைவரையும் நண்பர்களாக ஏற்றுக்கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தலைமை குருவான இயேசுவே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களின் அருட்சாதனங்களை திருச்சபையின் மக்களுக்கு நிறைவேற்றி, அனைவரையும் இறைவனிடம் கொண்டு செல்லும் ஆன்மீக பணியை செய்தவற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இறைவா, நீர் உமது பணிக்காக

தெரிந்து கொண்ட இவர்கள் அனைவருக்கும் நல்ல உடல், உள்ள சுகம் தந்து இறுதிவரை தங்களின் துறவற நிலையில் நிலைத்திருந்து உமக்கு சாட்சி பகர்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நற்கருணை நாதனே இறைவா, மனிதர்கள் மேலுள்ள அளவற்ற அன்பினால் உமது மகன் இயேசு கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் அப்ப வடிவிலே தந்து, என்றும் எங்களோடு தங்கி எங்களுக்கு ஆன்ம சரீர, சக்தியை தந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் இயேசுவின் உடலை நற்கருணையா உண்ணும்போது விசுவாசத்தோடும், பாவமற்ற நிலையிலும் உட்கொள்ளும் மனநிலையை தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அன்பே உருவான இறைவா, இன்றைய நாளின் முக்கிய நினைவாக அன்பு கட்டளையை தந்து கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படையான அன்பின் தன்மையை தன் வாழ்வின் இறுதிவரை வாழ்ந்து காட்டிய உம் திருமகன் இயேசுவைபோல் வாழும் வரத்தை தரவும், பகைவர்களையும், துன்பப்படுபவர்களையும் மன்னித்து அவர்களையும் அன்பு செய்யவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**14.04.2016 திருச்சிலுவை ஆராதனை வழிபாடு**

திரு. விக்டர்

**முன்னுரை**

இன்று நாம் தவக்காலத்தின் இறுதிநாளில் இருக்கின்றோம். இந்த தவ நாட்களில் நாம் மேற்கொண்ட பல தவமுயற்சிகள் நிறைவடையும் நாள். இந்த 40 நாட்களும் அசைவம் தவிர்த்தவர்கள் உண்டு. இந்த தவ நாட்களில் மதுவை தள்ளினவர்களும் உண்டு. தினந்தோறும் திருப்பலியில் பங்கெடுத்து காவி உடை உடுத்தினவர்கள் உண்டு. அனுதினம் சிலுவைப் பாதையை தியானித்தவர்களும் உண்டு. இந்த வெளி அடையாளங்கள் அல்லது தவ முயற்சிகள் எந்தளவுக்கு நமது தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவர் விரும்புகிற மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதைத்தான் ஆண்டவர் ஆவலோடு எதிர் நோக்கியுள்ளார். "உங்கள் உடைகளையல்ல உள்ளங்களை கிழித்துக்கொள்ளுங்கள்" என்ற அழைப்போடு இந்த காலத்தை தொடங்கியது நினைவில் இருக்கிறதல்லவா?.

**இன்று நாம் என்ன செய்யலாம்? சிந்திப்போம்.**

- நம்முடைய பாவங்கள்தானே இயேசுவை சிலுவையில் அறைந்தது என்று உணர்ந்தவர்களாய் "பாவத்தை வெறுக்கிறேன்" என்று ஆண்டவருக்கு வாக்கு கொடுப்போம்.
- இதுவரை யாரையாவது மன்னிக்கமுடியாமல் வெறுக்கிறவர்களாய் இருக்கிறோமென்றால் அவர்களை மனப்பூர்வமாய் மன்னிப்பதாக ஆண்டவருக்கு உறுதியளிப்போம்.
- நமது தனிப்பட்ட வாழ்வில் ஆண்டவரது திருவிவிலியத்தை வாசிக்காமலோ, தியானிக்காமலோ இருந்திருந்தோமென்றால், இனி தினந்தோறும் தவறாமல் வாசித்து, தியானிப்பதாக வாக்களிப்போம்.
- நம்மிடம் இருப்பதை தேவையில் இருப்போருக்கு பகிர்ந்தளித்து வாழ்வதாக ஆண்டவரிடம் சொல்வோம்.
- சாட்சிய வாழ்வு வாழ்ந்து நற்செயல் செய்தவன்மூலம் தந்தையை மகிமைப்படுத்துவேன் என்று ஆண்டவருக்கு வாக்களித்தவர்களாய் காணப்படுவோம்.

பரிசுத்த ஆவியானவரின் துணையோடு நம்மையே நாம் உற்றுநோக்குவோம். பழையன கழிந்து புதியனவற்றை அணிந்தவர்களாய் மாறுவேன் என்று ஒப்புக்கொடுப்போம். அதற்கு அவரின் ஆசிவேண்டி திருச்சிலுவை ஆராதனையில் பங்கெடுப்போம். இயேசுவின் இரக்கம் நமது சகல பாவங்களையும் விலக்கி நம்மை பரிசுத்தமாக்குவோம். சாட்சிகளாய் வாழ்வோம், வாரீர்.

**16.04.2017 உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி**

திரு. லூயிஸ்

**முன்னுரை**

இறையன்பில் இனியோரே, உயிர்த்த இயேசுவின் உன்னத நாமத்தில் நல்வாழ்த்துக்கள். அல்லேலூயா. உலகில் எத்தனையோ நம்பிக்கைகள் நடைமுறையில் உள்ளன. அவற்றிலெல்லாம் மிகவும் வியப்புக்குரியதும், மிகவும் சிறப்பு வாய்ந்ததும் இயேசு உயிர்த்தார் என்ற நம்பிக்கை. ஏனெனில், மரித்த மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையை ஏற்றுக்கொண்ட மக்களாகிய நம்மைப் போன்ற கிறிஸ்தவர்களின் விசுவாச அறிக்கையும், அதற்கு சான்று பகர்கின்றது. இம்மாபெரும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் பல மறைச்சாட்சிகள் தம் உயிரையே அர்ப்பணித்து இருக்கின்றார்கள். நடக்காத ஒன்றுக்காக அந்தப் பைத்தியக்காரன் தன் உயிரையே தர முன்வருவான்? எனவே இயேசு உயிர்த்தது உண்மை. "உண்மைக்காக மரித்த இயேசு உண்மையாகவே உயிர்த்தார்" என்ற நிலைப்பாட்டை நினைவுக் கூர்ந்து கொண்டாடும் நாம் அவ்விதமே உண்மைக்கு சான்று பகர்ந்து இயேசுவைப்போல மரித்து, உயிர்த்து, நிலைவாழ்வைக் காணும் நம்பிக்கையில் தளராமல் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**பதிலுரை: அல்லேலூயா. அல்லேலூயா, அல்லேலூயா**

அன்புத் தந்தையே இறைவா, உயிர்த்த இயேசுவின் உன்னத அருள் திருச்சபையில் நிரம்பி, உண்மைக்கு சான்று பகரும் பணியில் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் நிலைத்திருக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா, பாடுகளுக்குப் பின்னரே உயிர்ப்பின் மகிழ்ச்சி, எங்களுக்கு ஏற்படும் துன்பங்களுக்குப் பின்னர் இன்பம் உண்டு என்ற நம்பிக்கையை இவ்வுயிர்ப்பு பெருவிழா எங்கள் மனதில் வாழ்வில் நிலைத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா, எம் வாழ்விலும், செயலிலும், சொல்லிலும், சிந்தனையிலும் இயேசுவின் உயிர்ப்பு மாற்றத்தைக் கொடுக்கவும், நம்பிக்கையை அதிகரிக்கும் நற்செயல்களை செய்யத் தூண்டும் மனப்பான்மையை பெற்றுக் கொள்ளவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா, கண்ணீருடன் விதைப்பவர், களிப்புடன் அறுவடை செய்வர் என்றீரே, தண்ணீரின்றி வாடும் எம் தமிழ்நாட்டில் உமது உயிர்ப்பின் வல்லமையால் இரக்கத்தின் மழையைப் பொழியச் செய்து மகிழ்வும், நிம்மதியும் பெற்று மக்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**23-04-2017 பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு - இறை இரக்க ஆண்டவரின் திருவிழா திருப்பலி**

திரு. ஜான் அலெக்ஸ்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று பாஸ்கா காலத்தின் உயிர்ப்பின் இரண்டாம் ஞாயிறோடு இறை இரக்க ஆண்டவரின் திருவிழாவையும் நினைவு கூறுகின்றோம். நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பட்டன என்று முடிகிறது இன்றைய நற்செய்தி வாசகம். இயேசு தோமாவின் நம்பிக்கையின்மையை கடிந்துகொண்டார். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்று மொழிந்தார். இயேசு சாவையும் இருளின் ஆற்றல்களையும் வென்று உயிர்த்துவிட்டார் என்பதை நம்புவதற்கு அவரது சீடர்களே பெரிதும் தயங்கினர் என்பதை கண்டு நாம் வியப்படையலாம். ஆனால் நாமும் அப்படித்தானே. நம் வாழ்வில் நோய்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள் வரும்போது நாம் நம்பிக்கை இழக்கின்றோமே? இவை நாமும் உயிர்ப்பை நம்பவில்லை என்பதன் அடையாளங்களே. நாம் உயிர்ப்பின் சீடர்கள் என்றால் அனைத்தும் இறைவனில் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் வலிமை அடைய வேண்டும். அவ்வாறு நாம் நம்பவும் நம்பி வாழ்வு பெறவும் இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கின்றது. அந்த அழைப்பை ஏற்போம். தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

உயிர்ப்பின் நாயகனே இயேசுவே, உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்

சாவை வென்று உயிர்த்த மாட்சிமிகு இயேசுவே, தொடக்க காலத் திருச்சபையில் இருந்த அதே நம்பிக்கையை எங்களில் உருவாக்கும். பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்கு தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்றும் ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**25.04.2017 புனித மாற்கு நற்செய்தியாளர் திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமானவர்களே. நம் தாய் திருச்சபையானது இன்று தூய மாற்கு நற்செய்தியாளரின் திருவிழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இவரின் இல்லம் ஆதிக் கிறிஸ்தவர்கள் கூடும் இடமாக இருந்தது. புனித மாற்கு புனித பவுலோடும் தன்உறவினரான பர்னபாவோடும் நற்செய்திப் பயணங்களில் பங்கேற்றார். எகிப்தின் அலெக்சாந்திரியா நகர் திருச்சபையை இவர் நிறுவிய மரபு கூறுகிறது. இன்றைய நற்செய்தி வாசகத்தில் "இயேசு சீடர்களை நோக்கி, உலகெங்கும் சென்று நற்செய்தியை பறைசாற்றுங்கள்" என்றார் (மாற்கு 16:15). நற்செய்தி அறிவித்தல் என்பது வெறும் வார்த்தைகளில் நடைபெறுகின்ற ஒன்றல்ல. மாறாக, நற்செய்தி மனதில் ஏற்று அதை வாழ்வாக வாழ்வதே நற்செய்தி என்னும் இறைவார்த்தையின் அடிப்படையில் இத்திருப்பலியில் பங்கேற்போம், இறையாசீர் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

இறைமக்களாம் திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும் இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடித்து நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம் என்பதை நாங்கள் உணரும் ஆற்றலை தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, குடும்பங்கள் தூய ஆவியின் ஆற்றலால் நற்செய்தியின்படி கீழ்ப்படிந்து அன்புடனும், நட்புடனும் பகிர்ந்து வாழ்வதிலும் நிலைத்திருக்கச் செய்யத் தேவையான வரங்களை அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

ஏழைகளின் பங்காளரே எம் இறைவா, எம் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பொருளாதாரம், கல்வி, தொழில் மற்றும் அனைத்து உரிமைகளையும் நாட்டில் பெற்று இறப்புடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

வல்லமையால் சுகமளிக்கும் இறைவா, பலவிதமான நோய்கள், தீராத வியாதிகள், தொற்று நோய்கள் போன்றவைகளால் மனம் தளர்ந்து வேதனையில் வாழும் மக்களை உமது வல்லமையால் குணப்படுத்தவும் இவர்கள்மீது உமது பேரிரக்கத்தை அருளும்படியும் உம்மை மன்றாடுகிறோம்.

**28-04-2017 புனித லூயிஸ் தே மான்ஃபோர்ட் விழா** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்ஸ்

**"வார்த்தை மரியாவின் மகனானதும், மரியா கடவுளின் தாயானதும்"**

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித லூயி தே மான்ஃபோர்ட் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் திருத்தந்தை 2ம் ஜான்பால் அவர்களால் இப்புனிதர் மரியன்னை பக்திக்கு காரணமானவர் என்று புகழாரம் சூட்டப்பட்டவர். 1673ல் மான்ஃபோர்ட் என்ற இடத்தில் பிறந்து, 19வயதில் இறையியல் படிக்க சென்றவர் தன்னிடம் உள்ள பணத்தை வழியோரம் இருந்த ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார். ஆடைகளையும் அவ்வாறே செய்தார். காலப்போக்கில் 27வயிதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர், மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு சேவையாற்றுவதை வாழ்வாக்கிக் கொண்டவர். 1705ல் 32வயதில் கிராமங்கள், நகரங்கள் என 17 ஆண்டுகள் ஆண்டவரின் வாழ்வுதரும் மீட்புச்செய்தியைப் போதித்தார். இவரின் புத்தகங்களில் (1) உண்மை பக்தி, (2) செபமாலையின் இரகசியம் ஆகியவை இன்றும் புகழ்வாய்ந்தவை. அனைத்தையும் இறைதிட்டமென ஏற்றுப் பிறருக்காகவே மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயுற்றோர் சுகம் பெறவும் பணியாற்றியவர். 1716, ஏப்ரல் 20ல் விண்ணுலகம் அடைந்த இவர் 1947ல் புனிதநிலைக்கு உயர்த்தப்பட்டார். தான் பிறந்த பிறப்பின் பொருளை அறிந்து கொள்ளும் எல்லோருமே பிறருக்காக தங்களையே கையளிப்பவர்கள், இறைவனின் கையாக இருப்பார்கள் என்பதற்கு இவரே சான்று என்பதை மனதில்கொண்டு வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஐந்து அப்பங்களை கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தீரே, இன்றும் எண்ணிலடங்கா மக்களுக்கு உம்மையே உணவாகத் தந்தீரே, உம்மை இறைவனாக ஆண்டவராக கண்டு ஆராதிக்க வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

நிறைவின் உருவே இயேசுவே அன்று பாலை நிலத்தில் உம் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு உணவளித்தீரே எமது வாழ்விலும் எங்கள் துன்பவேளையில் நாம் வேண்டும் ஆசீர்வாதத்தையும் பலத்தையும் நிறைவாய் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**29.04.2017 புனித சியென்னா கத்ரீன் திருவிழா** **திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

இறையேசுவில் இனியோரே, இன்று நாம் தூய சியென்னா கத்ரீன்னாவின் நினைவு நாளைக் கொண்டாடுகின்றோம். இவர் கி.பி. 1347 முதல், 1380 வரை வாழ்ந்தார். இவர் இத்தாலியில் உள்ள சியென்னா என்னும் இடத்தில் ஓர் அரண்மனையில் பிறந்தார். இவர் ஆன்மீகத்தில் ஆழ்ந்த தாகம் கொண்டார். அன்மீகத் தாகத்தால் தன் தாயின் கண்டிப்பை மீறி தனது நீண்ட கூந்தலையம் வெட்டி இறைவன் அன்பை சுவைத்தார். இதனால் இல்லப்பணிகள் அனைத்தையும் செய்யும் தண்டனை

பெற்றார். தனது தந்தையின் பிரிவால், ஆதரவு பெற்று டோமினிக்கன் மூன்றாம் சபையில் சேர்ந்தார். அங்கு கொடுக்கப்பட்ட ஆடைகளையே அணிந்து தனது ஆன்மீக வாழ்வை வாழ்ந்தார். அன்னை மரியும், இறைமகன் இயேசுவின் இவர்களின் கனவில் தோன்றி இவர்களை வான்வீட்டிற்கு அழைத்துச் செல்லும் காட்சியை கண்டார். தனது பணிகளின் சிறப்பாலும், நுண் அறிவுத் திறமையாலும் திருத்தந்தையர்களே ஆலோசனை கேட்க இவரை நாடி வந்தனர். தனது உழைப்பால் உடல் நலிந்து 23ம் வயதில் ஏப்ரல் 11ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவரின் ஆன்ம தாகத்தை நாமும் இறைஞ்சுவோம், நமது பிள்ளைகளின் இறைபக்தியை வளர்க்கும் நல்ல பெற்றோர்களாக வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, புனித சியன்னா கத்ரீன்போல எம் திருஅவையின் அனைத்து அருட்பணியாளர்களும் உமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து அவ்வழியில் மக்களை அழைத்துச்செல்ல கூடிய அனைத்து அருள்வரங்களையும் நிறைவாக அளித்தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு கொண்ட இறைவா, தமிழகத்தில் பல பிரச்சனைகள், போராட்டங்கள், இழப்புகள், வேதனைகள் தொடர்ந்து அரங்கேறி வருகிறது. மக்கள் அமைதியாக வாழவும் தேவையான வளங்களும் பலன்களும் கொடுத்து நீர் அசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கமே உருவான இறைவா, கோடை வருமுன்னே வறட்சி எங்களை வாட்டுகிறது. உமது கொடையால் மோசேயின் தடியாக இப்பூமிக்கு வந்து வறட்சியைப் போக்கி உம் கருணையால் எங்களுக்கு நல்லதொரு மழைப்பொழிவை அளித்து பயிர்கள் செழிக்கவும், மக்கள் வாழ்வில் மகிழ்வைக் காணச் செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**30.04.2017 பாஸ்கா கால மூன்றாம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

இன்றைய வாசகங்களும் நற்செய்தியும் திட்டமிடுதல், முன்னறிவித்தல், செயலாக்கம் பெறுதல், வெற்றி பெறுதல் என நான்கு நிலைகளை நமக்கு தெளிவாக உணர்த்துகிறது. உயிர்ப்பு காலத்தில் புனித பேதுரு துணிவோடு எழுந்து நின்று உரத்த குரலில் தெரிந்து கொள்ளுங்கள், சொற்களை கவனியுங்கள், வார்த்தைகளை கேளுங்கள் என வலியுறுத்திக் கூறினார். இதே நிலையில்தான் நாம் இன்றுள்ளோம். காரணம் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் படைப்பு அனைத்தும் நல்லது என கண்ட இறைவன் காலப்போக்கில் இறை மனித விரோதப் போக்காக போனதைக் கண்டு வேதனையுறுகிறார். ஆனாலும் தனது படைப்பான மனித குலத்தின்மேல் இரக்கமும் அன்பும் கொண்டு வழிநடத்துகிறார். ஆனால் தவறு நடக்கும்போதும், தேவை ஏற்படும்போதும் இறைவாக்கினர்களை அனுப்பி எச்சரிக்கிறார். திருந்தி ஏற்றுக்கொண்டவர்கள் சிலர். இன்றுவரை ஏற்றுக்கொள்ளாதோர் பலர்.

இதனால் தான் இறைவன் தனது திட்டப்படி முன்னறிவித்த இறை இயேசு வழியாக செயல்படுத்த வைத்து அனைத்து மக்களும் நிலைவாழ்வு பெற சாவுக்கும் சவுக்கடி கொடுத்து உயிர்ப்புக்கு வழிவகை செய்தார். மேலும் அவரின் திருவுடலை உட்கொள்ளும்போது உயிர்ப்பின் மேன்மையை உணரச் செய்தார். இன்றைய கால சூழலில் நடக்கும் அனைத்து இறை மனித விரோதப் போக்கை கண்டித்து மேற்கூறிய நான்கு நிலைகளை நாமும் கடைபிடித்து அனைவரும் இறை சமூகமாக மாறி நிலைவாழ்வு பெற இறை உயிர்ப்போடு அதே துடிப்போடு செயலாக்கம் புரிவோம். அதற்காக இத்திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருஅவையின் பணியாளர்களாகிய திருத்தந்தை முதல் அடுத்துள்ள அனைத்து பணியாளர்களும் புனித பேதுருவைப்போல் உரத்த குரலில் இறைதிட்டத்தை அறிவித்து அதன்படி வாழ்ந்து மக்களையும் வழி நடத்திட உமது ஆசீர் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

நண்பர்களே என திருத்தூதர்களை அழைத்த இறைவா, எங்கள் திருஅவையில் மறுமலர்ச்சிக்காக உழைக்கும் அனைத்து நல்லுள்ளங்களும் மற்றும் அவர்களுடைய பணிகளும் திறந்த புத்தகமாக ஒளிவு மறைவின்றி இருந்திட நீர் வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

அரசரான இறைவா, எங்கள் தமிழகம் காப்பாற்றப்பட வேண்டும். எங்கும் எதிலும் உமது அரசு அமைய வேண்டும். அதற்கான நல் ஆட்சியாளர்கள் நியமிக்கப்படவேண்டும் மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். அன்பு, நீதி, இரக்கம், பரிவு, கொடை இறையரசு அமைய உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

நீதியான இறைவா, இன்று மக்களுக்கு உண்மை செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டிய அனைத்து தரப்பு ஊடகங்களும், பணத்திற்கு விலை போகாமல், மக்களை திசைதிருப்பாமல், நாடும், மக்களும் நல்வாழ்வு பற்றி மட்டும் கருத்தில்கொண்டு உண்மை செய்திகளை வெளியிட அவர்களுக்கு ஆற்றலும், வல்லமையும் பொழிந்து காத்திட உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### உண்மையான அன்பும் தியாகமேற்கும் குணமும்-பெரிய வெள்ளி தரும் சிந்தனை

திரு. விக்டர்

அன்புக்கு அடையாளமாக, மாதிரியாக யாருடைய அன்பைச் சொல்லலாம்? உலகிலே சிறந்தது தாயின் அன்புதான். எனவே அன்புக்கு அடையாளமாக "தாயின் அன்பை" சொல்லலாம். மற்ற யாருடைய அன்பும் "அம்மா"வின் அன்புக்கு அடுத்த நிலையில்தான் வைத்துப் பார்க்கப்படும். ஆனால் அந்த தாயின் அன்பைவிட சிறந்தது. "என்னுடைய அன்பு" என்று ஆண்டவர் உரைக்கின்றார். "உன்தாய் ஒருவேளை உன்னை மறந்து போகலாம். ஆனால் கடவுளின் அன்பு எவ்வளவு சிறந்தது என்பதை அறிய முடிகிறது. ஏனெனில் தாயின் அன்பில் ஒரு சிறிய எதிர்ப்பார்ப்பு உள்ளது. "தன்னுடைய வயதான காலத்தில் தன் மகன் தன்னை கவனித்து கொள்ள வேண்டும்" என்கிற எதிர்பார்ப்பு எல்லா அம்மாக்களிடமும் உண்டு, இது தவறும் அல்ல, ஆனால் கடவுளின் அன்பு இதைவிட ஒருபடி மேலாகச் சென்று நாம் பாவிகளாய் இருக்கையிலேயே தம் மகனை நமக்காக மரிக்கச் செய்த அன்பு (உரோ 5:8). அதனால்தான் கடவுளின் அன்பை உண்மையான அன்பு என்கிறோம்.

தான் மிகவும் நேசித்து உருவாக்கின மனிதன் கீழ்ப்படியாமையினாலே பாவத்தில் விழுந்தபோது, மனம் வருந்தின ஆண்டவர் கோபத்தில் அவனுக்கு தண்டையை வழங்குகிறார். ஆனால் அடுத்த வினாடியே அவனை மீட்பதற்கு தம் மகனையே அனுப்புவதாக வாக்களிக்கிறார். இங்குதான் ஆண்டவரது உண்மையான தியாக குணத்தைப் பார்க்கிறோம்.

மனித அன்பு எதிர்பார்ப்புள்ளது, மனித அன்பு பதிலுக்கு பதில்செய்யும், மனித அன்பு ஆள்பார்த்து வருவது, மனித அன்பு நிரந்தரமில்லாதது, மனித அன்பு தன்னை அதிகமாக வருந்திக்கொள்ளாதது, மனித அன்பு நேரத்திற்கு நேரம் மாறும், மனித அன்பு பணத்திற்கு விலைப்போகும், ஆனால் கடவுளின் அன்பு இவற்றிற்கு நேர் எதிரானது, ஆம், கடவுளின் அன்பு தன்னை வருத்திக் கொள்ளும் அன்பு, நமக்காக உயிரையும் கொடுக்கும் அன்பு (யோவான் 3: 16).

கடவுளின் அன்பு பாவிகளையும் நேசிக்கும், தன்னை மறுதலித்தவனையும் மன்னிக்கும், கடவுளின் அன்பு ஏற்றத்தாழ்வு பார்க்காத அன்பு. கடவுளின் அன்பு நிரந்தரமானது ஏனெனில் வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் ஆண்டவரது வார்த்தையோ அதன் புள்ளியோ ஒழிந்துபோவதில்லை. கடவுளின்

அன்பு எதையும் எதிர்நோக்காதது. அவருடைய எதிர்பார்ப்பு நம்முடைய "ஆன்மா" மட்டுமே. சக்கேயுவின் வீட்டில் நடந்த நிகழ்வின் மூலம் இவற்றை அறியமுடியும் (லூக்கா 19:10).

தியாகங்கள் இல்லாமல் அன்பை உணரமுடியாது, கடல் என்றால் அலை இருக்கும், வானம் என்றால் மேகம் இருக்கும், பனி என்றால் குளிர் இருக்கும், நெருப்பு என்றால் சூடு இருக்கும். அதுபோல அன்பு என்றால் தியாகம் இருக்கும், இருக்க வேண்டும். அநேக உதாரணங்கள் மூலம் இதை அறிந்துள்ள நம் அன்பை வெளிப்படுத்தி வாழும் உள்ளத்தையும், அதற்காக எவ்விதமான தியாகத்தையும் ஏற்பவர்களாக வாழும் வரத்தை இன்று ஆண்டவரிடம் மன்றாடுவோம். ஏனென்றால் "அன்பு எல்லாவற்றையும் தாங்கும்". அன்பு என்றால் அதில் சந்தோஷமுண்டு, அன்பு என்றால் அதில் தியாகம் உண்டு, அன்பு என்றால் அதில் போராட்டம் உண்டு, அன்பு என்றால் அதில் வெற்றி உண்டு, அன்பே கடவுள்.

## உயிர்ப்பும் இன்றைய வாழ்வும்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

அவர் இறந்துவிட்டார். அவர் மறைந்துவிட்டார். இயற்கை எய்திவிட்டார். இவர் இறைவனை அடைந்துவிட்டார் என வருத்தத்தோடு தெரிவிக்கின்றோம். வழிவழியாய் சொல்லி வருகிறோம். இறந்தவன் மறைந்தான், இனி அவன் மீண்டும் வருவானா? அவன் உயிர்ப்பானா? சாத்தியமா? மனித உயிர்ப்பை என்றும் தத்துவ ஞானிகள் நம்பவில்லை? இது இயற்கைக்கு எதிரானது, அறிவியலுக்கு அப்பாற்பட்டது. அனைவருக்கும் இறப்பு உண்டு, மறப்பதற்கில்லை. ஆனால் இங்கே உயிர்ப்புண்டு மறுப்பதற்கில்லை. உயிர்த்தெழுதல் ஆன்மா அளவில் மட்டும் அன்று, உடல் சேர்ந்த ஒரு மனிதன் உயிர்ப்பாகும். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு நம் அனைவருக்கும் ஓர் சிறந்த நம்பிக்கை. கிறிஸ்தவம் வாழ்வதற்கான உண்மையின் சாட்சி.

மனிதர்களை மனதில் சுமந்தேன்-அதனால் மரணம்கூட வலிக்கவில்லை. இயேசுதாமே சொல்வார். கறைபடிந்த இதயங்களுக்காய் வானத்திற்கும் பூமிக்குமிடையே தொங்கி, தனது ஆவியை தந்தையின் கையில் ஒப்படைத்தார். வரலாறு படைக்க வந்தவரின் வரவும், பிரிவும் இரவில்தான். குடிலில் ஆரம்பித்த பயணம் குகையில் முடிந்தது. குகையின் கல்லறை வாயிலில் பெரிய கல்லொன்று வைக்கப்பட்டது. மூடிய பின்னரே அரசு முத்திரையும் குத்தப்பட்டது. ஆயுதம் தாங்கிய காவலர் அங்கே காவல் காத்தனர். வரலாற்றில் முதன் முறையாக கல்லறை வாயிலில் காவல் காத்தது இறைமகனாம் இயேசுவுக்கே. இது இன்றுவரை ஒரு அதிசயம். அதோ அந்த அமரவிளக்கு மூன்று நாட்கள் மட்டும் தன் வெளிச்சத்தைப் புதைத்திருந்தது. இருளோ வெளிச்சத்தை புதைக்குழிக்குள் அமிழ்த்துவிட்டோமென இருமாப்பு கொண்டது. எவ்வளவு பெரிய இருட்டானாலும் கழிக்கு அதைக்கிழிக்காமல் விடாது. இதோ, கிழக்கின் விளக்காக கிளர்ந்து விடுகிறார் கிறிஸ்து. விடியலின் வெற்றிக்காய், சாதனையின் சரித்திரமாய் கிளர்ந்து எழுந்தார். உயிர்த்து எழுந்தார், உயிர்த்தேன் உன்னோடு வாழ என்று நமக்கு எடுத்துக்காட்டினார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது இறந்த லாசரை, நயீம் விதவையின் மகனை, யாயீர் மகளை உயிர்த்தெழச் செய்தது போலாகாது. உண்மையில் இம்மூவரும் மீண்டும் இறந்து போயினர். ஆனால் இறைமகன் இயேசுவின் உயிர்த்தெழுதலோ மாறுபட்டது. மறுக்க முடியாதது. அது மனுமகனின் இறப்பற்ற வாழ்வைக் காட்டுகிறது. வெல்ல முடியாதவர் இறைவன் என்றே உறுதியாய் எடுத்துக் காட்டுகிறது.

இயேசு உயிர்த்தார், உயிர்த்த இயேசு மரிய மகதலாவுக்கு, தோமாவுக்கு, பேதுருவுக்கு காட்சித் தந்து நம்பிக்கையை விதைத்தார். தோமா விசுவாசத்தைக கண்டடைந்தார். பேதுரு மன்னிப்பைக் கண்டடைந்தார். கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் உச்ச உண்மையாக உயிர்ப்பு திகழ்கிறது. மேலும் அவருடைய சிலுவைப் பாடுகளோடு அது பாஸ்கா மறைபொருளின் ஓர் இன்றியமையாப் பகுதியாகத் திகழ்கிறது.

உயிர்ப்பு, அடையாளங்களாலும், சாட்சியங்களாலும் எண்பிக்கப்படக்கூடிய வரலாற்று நிகழ்ச்சியாக உள்ளது. அதே நேரத்தில் மனிதர் என்னும் முறையில் கிறிஸ்து இறை மாட்சியில் நுழைவதை இது

குறிக்கிறது. இறந்த கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற சாட்சியத்தில்தான் கிறிஸ்தவம் வாழ்கிறது, உயிர்த்தெழுதலின்றி இந்த கிறிஸ்தவ நம்பிக்கை இறந்துவிடும்.

இந்த உயிர்ப்பு பல பரிமாணங்களைப் பெறும்போது நம்பிக்கைப் பிறக்கிறது. தன்னம்பிக்கை மலர்கின்றது, வறுமையால், வரதட்சணையால் வாழ்வினையே கேள்வியாக்கி உரிமைக்காகப் போராடும் பெண்கள் விதவைகள் வாழ்வு மலர்ச்சி பெற பெண்ணியத்திற்குப் பொருள் கொடுக்கும்போது ஏற்படும் "தாய்மையே உயிர்ப்பாகிறது". எதிர்காலத்தை உருவாக்கும் குழந்தைகள் அநாதைக் குழந்தைகள், தொழிற்சாலைகளில் நடைபிணங்களாகத் திரியும் நிலைகண்டு கொதித்து கல்வியறிவு மூலம் அவர்தம் எதிர்கால வாழ்விற்குத் தயாரிக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் ஏற்படும் தன்னம்பிக்கையே உயிர்ப்பாகிறது. முகவரியற்ற வாழ்விழந்த உரிமையற்று வாழும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழிகாட்டி, தன்மான உணர்வு ஊட்டி போராட்டங்களில் பங்கெடுத்து வாழ்வுரிமைக்கு வழிவகுக்கும் "உரிமை உணர்வே" உயிர்ப்பாகிறது.

எதிர்காலமே சூனியமாக சிதறடிக்கப்பட்டு யாவராலும் அருவருக்கப்பட்டு ஒதுக்கப்படும் தொழுநோயாளிகள், கேன்சர் நோயாளிகள் வாழ்வில் அக்கறைக்கொண்டு பணியின் வழி அவர்தம் மனிதத்தோடு ஒன்றிணைக்கும் "அன்புறவே" உயிர்ப்பாகிறது. அங்காங்கு அன்றாட கூலிக்காக அயராது பாடுபடும் அன்றாட கூலிகள் ஒன்றிணைக்கப்படாத தொழிலாளிகளின் வாழ்வு வளம்பெற அவர்களோடு இணைந்து பாடுபடும்போது எழும் "போராட்டக்குரலே" உயிர்ப்பாகிறது.

ஆம். இயேசுவில் வாழும் மக்கள் அனைவரும் "உயிர்ப்பின் மக்கள்" மகிழ்ச்சியின் மக்கள். சோகங்களைத் தங்கள் ஆடைகளாக உடுத்தியிருப்போர் மகிழ்ச்சியை அணியும்போது உயிர்ப்பு தானாக உற்பத்தியாகும். எனவே நம்பிக்கை இழந்தோர் மகிழ்ச்சியை அணியும்போது உயிர்ப்பு தானாக உற்பத்தியாகும். நம்பிக்கை இழந்தோர் வாழ்வில் நம்பிக்கையாக, உறவு இழந்தோர் வாழ்வில் உறவாக, மன்னிக்க முடியாதோர் வாழ்வில் மன்னிப்பாக, துன்புறும் மனிதர்களுக்கு ஆறுதல் கூறும் வார்த்தையாக உணர்வோம்.

உயிர்த்த இயேசு கூறியவைகளை உணர்ந்தவர்களாய் நாம் வாழ்ந்து காட்டுவோம். இன்று சமூகத்தின் சுமைகளாய்ச் சோர்ந்து போனவரை இனம் கண்டு கொள்ளவேண்டும். குடும்பத்தின் சிக்கல்களினாலும், சமூக அவலங்களுக்கு மத்தியில் சீரழிந்துபோன பொருளாதார நெருக்கடியில் சிதைந்து போனவர்களைக் கண்டுணர்பவர்களாக, துன்பத்தில் தோள்கொடுப்பவர்களாக, இருப்பதைப் பகிர்ந்துக் கொள்பவர்களாக, அந்நியனுக்கு ஆறுதல் அளிப்பவர்களாக, ஆதரவற்றவர்களுக்கு அன்பு காட்டுபவர்களாக, பசித்தவர்களுக்கு உணவு அளித்தவர்களாக, மனம் உடைந்தவர்களுக்கு வலிமைச் சேர்ப்பவர்களாக கிறிஸ்தவ வாழ்வில் உயரவேண்டும். உயிர்ப்பு சக்தியைப் பெற்று நம்மில் புதைந்துள்ள மனித நேயத்திற்கெதிரான அவலங்களை அகற்றி நாம் உயிர்ப்போம், மகிழ்வுடன் அல்லேலூயா பாடுவோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

தவக்காலம் நம் உடனடி மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. நம் முழு இதயத்தோடு இறைவனிடம் திரும்பி வருவதற்கு நாம் அழைக்கப்படுகின்றோம். மற்றும் உண்மையான நோன்பு என்பது பிறருக்கு உதவுவதாகும். போலியான நோன்பு என்பது, மத உணர்வை அழுக்கான செயல்களோடு கலப்பதாகும். மற்றும் இது தற்பெருமையை பறைசாற்றுவதாகும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். கைத்தொலைப் பேசியைப்போல், எப்போதும் விவிலியப்பிரதியை தங்கள் கையில் வைத்துக்கொண்டு இயேசு வழங்கும் செய்தியை வாசித்து அறியுமாறு அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

தவக்காலத்தில், திருத்தந்தையும், திருப்பீடத் துறைகளைச் சார்ந்த உயர் அதிகாரிகளும் தியானம் செய்வது, ஏறக்குறைய 80ஆண்டுகளுக்கு முன்னர், திருத்தந்தை 11ம் பயஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வழக்கம் என்பதும், வத்திக்கானிலேயே இத்தியானங்கள் நடைபெற்று வந்த

பழக்கத்தை மாற்றி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விருப்பத்தின்படி 2014ம் ஆண்டு, தவக்காலத்திலிருந்து உரோம் நகருக்கு வெளியே, ஒரு தியான இல்லத்தில் இது நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு மார்ச் 5 முதல் 10 வரை இது நடந்து முடிந்தது.

குரவேசியா நாட்டின் Primošten என்ற நகரில் நிறுவப்படவிருக்கும் அன்னை மரியாவின் திரு உருவம், உலகிலேயே மிகப் பெரிய உருவச் சிலையாக அமையும் என்று, அந்நகராட்சி அறிவித்துள்ளதென CNA கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது. திருப்பீடமும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஆதரவு அளித்து, ஆசீர் வழங்கியுள்ள இந்த முயற்சியால் நிறுவப்படும் இந்த உருவச்சிலை 55அடி உயரம் கொண்டதென்றும், வானம் தெளிவாக உள்ள நாட்களில், இந்த உருவச் சிலையை, இத்தாலி நாட்டிலிருந்தும் பார்க்க முடியும் என்றும், Primošten நகராட்சி அறிவித்துள்ளது. இத்தாலிய நாட்டின் Cammini Lauretani என்ற நிறுவனத்தின் உதவியுடன், நிறுவப்படும் இந்த உருவச் சிலை, லொரேட்டோ அன்னை மரியாவின் சிலை என்றும், இந்நகரில், ஒவ்வோர் ஆண்டும், அன்னையின் விழா மே மாதம் 9,10 தேதிகளில் சிறப்பிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஏமன் நாட்டிலிருந்து கடத்தப்பட்ட சலேசிய சபையின் அருள்பணி டாம் உழுன்னாலில் அவர்களின் விடுதலைக்காக இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் பசிலியோஸ் கிளீமிஸ் அவர்களின் விண்ணப்பத்தின் பேரில், இந்தியா முழுவதும் கத்தோலிக்கர்களால், செபவழிபாடுகள் நடத்தப்பட்டன. கடந்த வருடமாக கடத்தி வைக்கப்பட்டிருக்கும் சலேசிய சபை அருள்பணி டாம் அவர்களின் விடுதலைக்காக, திருத்தந்தையும் ஏற்கனவே தன் கோரிக்கையை வைத்துள்ளார்.

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ள நில உரிமை குறித்த இரண்டு சட்டங்களுக்கு அம்மாநிலக் கிறிஸ்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பெரும்பாலும், பூர்வீக இன விவசாய மக்களைக் கொண்டிருக்கும் இம்மாநிலத்தில், அம்மக்கள், தங்கள் நிலங்களைப் பயன்படுத்துவதற்கு இச்சட்டங்கள் அச்சுறுத்தலாக உள்ளன என்று சொல்லி, ராஞ்சிப் பேராயர், கர்தினால் டெலஸ்போர் டோப்போ அவர்களின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள குழு ஒன்று, மாநில ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளது.

**சுடர் வாசகர் போட்டி 33 சரியான விடைகள்**

1. மார்ச் 19
2. காந்தியடிகள்
3. தன் உள்ளத்தில்
4. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர்
5. திருத்தந்தை பிரான்சிஸ்
6. பேராயர் ஜார்ஜ் அந்தோனி சாமி, ஆயர்களுக்கு
7. இறைவனை
8. லூக் 23:34
9. தூய யோசேப்பு, தூய மரியாள்
10. எபேசு திருச்சங்கம்
11. தொடக்க நூல் 2:15
12. உழைப்பும், உறவும்
13. யோவான் 3:3
14. பேராயர் ஜார்ஜ் அந்தோனி சாமி
15. தேங்கிய குட்டைப் போன்று

# சுடர் வாசகர் போட்டி 34

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

1. தொழிலாளர் புனித யோசேப்பு
2. பிலிப்பு, யாக்கோபு - திருத்தூதர்கள்
3. தோமினிக் சாவியோ (இறந்து 160 ஆண்டுகள்)
4. மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்
5. உயிர்ப்பு கால ஞாயிறுகள்
6. சகாய அன்னை திருவிழா
7. சகாய அன்னை நவநாள்
8. தூய ஆவி பெருவிழா நவநாள் (கலாத் 5: 23) 9 கனிகளுக்கான செபம்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. தோமினிக் சாவியோ - புனிதத்தின் இளமுகம்
2. கிறிஸ்தவர்களின் சகாய அன்னை - வரலாறும் விசுவாசமும்
3. தூய ஆவியானவதும் இன்றைய கிறிஸ்தவ வாழ்வும்
4. திருச்சபை செய்திகள்

**அடுத்த சுடரில்**

**ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. ச | எரே. 11: 18-20 | தி.பா. 7:1-2.8ஆஇ-9.10-11 | யோவான் 7:40-53 |
| 2. ஞா | I. எசேக் 37:12-14<br>II. உரோ.8:8-11 | தி.பா. 130:1-2.3-4.5-6ஆ-8 | யோவான் 11:1-45 |
| 3. தி | தானி.(இ)2:1-9,15-17,19-30,33-62 | தி.பா. 23:1-3அ.3ஆ-4.5.6 | யோவான் 8:1-11 |
| 4. செ | எண். 21: 4-9 | தி.பா. 102:1-2.15-17.18-20 | யோவான் 8:21-30 |
| 5. பு | தானி 3:14-20,24-25,28 | தானி.(இ)1:29.30-31.32-33 | யோவான் 8:31-42 |
| 6. வி | தொ.நூ. 17: 3-9 | தி.பா.105:4-5.6-7.8-9 | யோவான் 8:51-59 |
| 7. வெ | எரே. 20:10-13 | தி.பா. 18:1-2அ,3.4-5.6 | யோவான் 10:31-42 |
| 8. ச | எசேக். 37: 21-28 | எரே. 31:10.11-12அஆஇஈ.13 | யோவான் 11:45-57 |
| 9. ஞா | I. எசா. 50:4-7<br>II. பிலி. 2:6-11 | தி.பா. 22:7-8.16-17அ.18-19.22-23 | மத்தேயு 26:14-27:66 |
| 10. தி | எசா. 42:1-7 | தி.பா. 27: 1.2.3.13-14 | யோவான் 12:1-11 |
| 11. செ | எசா. 49: 1-6 | தி.பா. 71:1-2.3-4.5-6.15,17 | யோவான் 13:21-33.36-38 |
| 12. பு | எசா. 50: 4-9அ | தி.பா. 69:7-9.20-21.30,32-33 | மத்தேயு 26:14-25 |
| 13. வி | I. வி.ப. 12:1-8,11-14<br>II. 1கொரி. 11: 23-26 | தி.பா.116:12-13.15-16.17-18 | யோவான் 13:1-15 |
| 14. வெ | I. எசா. 52: 13-53:12<br>II. எபிரே. 4:14-16, 5:7-9 | தி.பா. 31:1,5.11-12.14-15.16,24 | யோவான் 18:1-19:42 |
| 15. ச | பெரிய சனிக்கிழமை காலை திருப்பலி இல்லை. இரவு பாஸ்கா திருவிழிப்பு வாசகங்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| 16. ஞா | I. தி.ப.10:34அ,37-43<br>II. கொலோ. 3:1-4 | தி.பா.118:1-2.16-17.22-23 | யோவான் 20:1-9 |
| 17. தி | தி.ப. 2:14,22-33 | தி.பா. 16:1-2.5,7-8.9-10.11 | மத்தேயு 28:8-15 |
| 18. செ | தி.ப. 2:36-41 | தி.பா. 33:4-5.18-19.20.22 | யோவான் 20:11-18 |
| 19. பு | தி.ப. 3: 1-10 | தி.பா. 105:1-2.3-4.6-7.8-9 | லூக்கா 24:13-35 |
| 20. வி | தி.ப. 3: 11-26 | தி.பா. 8:1அ, 4.5-6.7-8 | லூக்கா 24:35-48 |
| 21. வெ | தி.ப. 4: 1-12 | தி.பா. 118:1-2, 4.22-24.25-27அ | யோவான் 21:1-14 |
| 22. ச | தி.ப. 4:13-21 | தி.பா.118:1,14-15.16,18.19-21 | மாற்கு 16:9-15 |
| 23 ஞா | I. தி.ப. 2:42-47<br>II. 1பேதுரு 1: 3-9 | தி.பா. 118:2-4.13-15.22-24 | யோவான் 20:19-31 |
| 24. தி | தி.ப.4: 23-31 | தி.பா. 2:1-3.4-6.7-9 | யோவான் 3:1-8 |
| 25. செ | 1பேதுரு 5:5ஆ-14 | தி.பா. 89:1-2.5-6.15-16 | மாற்கு 16:15-20 |
| 26. பு | தி.ப. 5: 17-26 | தி.பா. 34:1-2.3-4.5-6.7-8 | யோவான் 3:16-21 |
| 27. வி | தி.ப.5:27-33 | தி.பா. 34:1,8.16-17.18-19 | யோவான் 3:31-36 |
| 28. வெ | தி.ப. 5: 34-42 | தி.பா. 27:1.4.13-14 | யோவான் 6:1-15 |
| 29. ச | தி.ப. 6: 1-7 | தி.பா. 33:1-2.4-5.18-19 | யோவான் 6:16-21 |
| 30. ஞா | I. தி.ப. 2: 14,22-33<br>II. 1பேதுரு 1:17-21 | தி.பா. 16: 1-2,5.7-8.9-10 | லூக்கா 24:13-35 |